# வேத பாரதி செய்திகள்

தமிழ் மாத இதழ்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly

மலர் : 7 | இதழ்: 12 | செப்டம்பர் : 2023 | ரூ.20/-

Volume: 7 | Issue: 12 | September : 2023 | Rs.20/-






பரனூர் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா
பாதம் பணிவோம்

## SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14



# அஷ்டோத்ர ஸத சுக்ர வார
# ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம்

**52வது பாராயணம் - 04.08.2023 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ தேவி திருமணியம்மன் திருக்கோவில்**
அண்ணாநகர், சென்னை - 40.

**53வது பாராயணம் - 11.08.2023 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ சக்ர மஹாமேரு திருக்கோவில்**
சக்கரபாணி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33.

**54வது பாராயணம் - 18.08.2023 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ நவசக்தி காமாட்சி அம்மன் திருக்கோவில்**
மடிப்பாக்கம், சென்னை - 600 091.

**55வது பாராயணம் - 25.08.2023 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி கோயில்**
மேற்கு மாம்பலம், சென்னை - 33.

**56வது பாராயணம் - 01.09.2023 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ தர்ம சம்வர்த்தனி அம்பிகா ஸமேத குறுங்காலீஸ்வரர் கோவில்**
கோயம்பேடு, சென்னை.

---

தங்கள் வீடுகளுக்கு அருகில் உள்ள ஆலயங்களில் வெள்ளிக்கிழமைகளில் மண்டலி சார்பாக ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் செய்திட அனுக வேண்டிய எண்.

**9443495950, 9444060346**

# வேதபாரதி
## செய்திகள்



காயத்ரீ தேவி

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

## வேதமந்திரம் - 49

**வேதா[3]ஹமேத[1]ம் பு[1]ருஷம் மஹாந்த[1]ம்**
**ஆதி[3]த்[1]யவர்ணம் த[1]மஸ:ப[1]ரஸ்தா[1]த்[1]**
**த[1]ம் ஏவம் வித்[3]வான் அம்ருத[1] இஹ ப[4]வதி[1]**
**நான்ய ப[1]ந்தா[2] வித்[3]யதே அயனாய**

**தைத்தரீய ஆரண்யகம்.**

**பொருள் :** *பெருமைக்குரிய புருஷோத்தமரை நான் அறிந்து கொண்டேன். இருளுக்கு அப்பாற்பட்டு (இருளைப் போக்கடிக்கும்) ஸூர்யனாகப் ப்ரகாசிப்பவர் அவர்.*

*இந்தப் பிறவிலேயே அவரை அறிந்து கொள்வதால் மரணத்தைக் கடக்க முடியும். மோக்ஷத்தைப் பெறுவதற்கு வேறு எந்த வழியும் கிடையாது.*

*|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: |*

# வேதபாரதி செய்திகள்

**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 7 இதழ்: 12

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23

RNI No : 1282188

Title Code : TNTAM/2016/73726

R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**

(Tamil Monthly Magazine)

Published on : 1-7th (1st Week) Every Month

TN/PM G (CCR) / WPP 605/21-23 /
Valid from 01.01.2021 to 31.12.2023

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதிதெரு, இந்திராநகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,
செ - 42. போன்: 9025864231


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு... | 5 |
| புரட்டாசி மாத விசேஷங்கள் | 7 |
| அட்டைப்பட விளக்கம் | 8 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 10 |
| ஸ்ரீமத் பாகவதம் | 13 |
| ஆதிசங்கரர் | 15 |
| அறுபத்தி மூன்று நாயன்மார்கள் | 17 |
| மூதுரை (ஔவையார்) | 20 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 21 |
| தர்மத்தின் குரல் | 22 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 23 |
| அறிவோம் ஆழ்மனதின் | 31 |
| ஆசான் | 33 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 39 |
| சாதனைப்பறவைகள் | 43 |
| இராமாயணம் தரும் படிப்பினை | 45 |
| தருவின் நிழலில் | 48 |
| அட்ட வீரட்டத் தலங்கள் | 52 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட

**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**



நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**D. சூரியநாராயணன்**
**Cell : 98841 05302**

**R. வெங்கட்ராமன்**
**Cell : 94434 95950**

Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

# ஒரு நிமிடம் உங்களோடு!

## 61. விக்ரஹ ஆராதனை

நமக்குள்ளே எப்போதும் “இல்லை” என்ற உணர்வு இருந்துக்கொண்டே இருக்கிறது. இதை மாற்றிக்கொள்ள மனித மனம் எப்போதும் ஒரு உதவியைத் தேடுகிறது. அதுதான் “பகவான்”. (கடவுள்) அப்படிப்பட்ட பகவான் நம்மிலிருந்து வேறாக அதாவது வெளியில் (கோயிலில்) இருப்பதாக நினைக்கிறோம். அப்படி பகவானைத் தேடி கோயில்களுக்குப் போனால் நாம் அங்குள்ள விக்ரஹத்தை அல்லது விக்ரஹங்களை ஆராதிக்கிறோம். எதற்காக அந்த காலத்தில் நம்முடைய ரிஷிகள் இந்த விக்ரஹ ஆராதனையை வைத்தார்கள்? விக்ரஹ ஆராதனையின் லட்சியம் ஆரம்பத்தில் நமக்கு ஒரு நம்பிக்கை வேண்டும். என்னை காப்பாற்ற, நான் வேண்டியதை அடைய ஒரு கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கை. அந்த கடவுள் நம்பிக்கையை வலுவூட்டத்தான் கடவுள் விக்ரஹங்களை வைத்தார்கள்.

நம்முடைய ரிஷிகள் மேலும் சிந்தித்து, ஒவ்வொருவருடைய எதிர்பார்ப்பு **(ஆக்ரஹம்)** வேறு வேறாக இருக்கும், அதாவது சிலருக்கு பணம் வேண்டும், சிலருக்கு நல்ல குடும்ப வாழ்க்கை வேண்டும், சிலருக்கு கல்வி வேண்டும், சிலருக்கு நல்ல ஆரோக்யம் வேண்டும். இப்படி பல தேவைகள், அதனால் பலபல உபாசனைகள் தொடங்கின. பணம் வேண்டியவர்கள் **“லக்ஷ்மியை”** வணங்க வேண்டும். கல்வி வேண்டுமானால் **“சரஸ்வதியை”** வணங்க வேண்டும். குழந்தை வேண்டுமானால் **சந்தான கோபாலனை** உபாசிக்க வேண்டும். இப்படி முதலில் ஒரு நம்பிக்கையை கொடுக்க அநேக தெய்வங்களின் விக்ரஹங்கள் (உபாசனை மூர்த்திகள்) வந்தன. ஒவ்வொரு இலாக்காவிற்கும் தனித்தனி மந்திரிகள் இருப்பது போல்.

நம் ரிஷிகள் எதிர்பார்த்தது முதலில் விக்ரஹ ஆராதனையை வைத்தால் அதில் ஈடுபட்டு மனம் தெளிந்து மனிதர்கள் அடுத்த படிக்கு ஏறிச் செல்வார்கள் என்று. ஆனால் மனிதர்களில் பெரும்பாலோர் அந்த விக்ரஹ ஆராதனையிலேயே ஊறிப்போன தோடல்லாமல் அதில் மேலும் குழம்பி யாரை பூஜிப்பது? சிவனையா? அல்லது விஷ்ணுவையா? என்று தெரியாமல் திளைக்கிறார்கள்.

நாம் முதல் படியிலிருந்து இரண்டாவது படிக்கு ஏறவேண்டும். அதாவது விஸ்வாசத்திலிருந்து (அதாவது நம்பிக்கையிலிருந்து) விசாரத்திற்கு மாறவேண்டும். அதாவது ஸத்ஸங்கங்களுக்குப் போகவேண்டும். அங்குதான் நமக்கு தெளிவு கிடைக்கும்.

விக்ரஹங்களில் சைதன்யம் இருப்பதால்தான் அவற்றை நாம் விநாயகராகவும், முருகனாகவும், சிவனாகவும், விஷ்ணுவாகவும், ஆராதிக்கிறோம். நாம் அந்த விக்ரஹ கல்லை பூஜிப்பதில்லை. அதில் உள்ள ஒரு சைதன்யத்தைத்தான் பூஜிக்கிறோம்.

நம் தந்தையின் ஓவியத்தைப் பார்த்தால் அந்த ஓவியத்தில் நம் தந்தையையே நாம் காண்கிறோம். இதுபோல் ஒரு கல்லில் ஒரு கடவுளின் சிலை வடிக்கப்படுகிறது. அப்போதும் அது கல்தான். அதை கோயிலில் கருவறையில் **“பிரதிஷ்டை”** செய்தபிறகுதான் அதில் சைதன்யம் (இயக்கும் சக்தி) உண்டாகிறது. **“பிரதிஷ்டை”** என்றால் ஒருவருடைய சைதன்யத்தை அந்த சிலையில் ஆவாஹிப்பது. அதாவது சக்தியை எழுந்தருளச் செய்தல். அப்படி ஆவாஹனம் செய்த ஒரு சைதன்யத்தைத்தான் பூஜிக்கிறோம் என்றால் உண்மையில் நாம் பூஜிப்பது நம்முடைய சைதன்யத்தைத்தான். கோயிலுக்குப் போனால் அங்குள்ள விக்ரஹத்தை தொழும்போது இதில் உள்ள சைதன்யம் தான் என் உள்ளேயும் இருக்கிறது என்று நினைக்கவேண்டும்.

தொகுப்பு : **D. சூரியநாராயணன்**

## சோபக்ருது வருஷம் - புரட்டாசி மாத விசேஷங்கள்
**(செப்டம்பர் 18.09.2023 முதல் அக்டோபர் 17.10.2023 வரை)**

| | | | |
|---|---|---|---|
| *18.09.2023* | *புரட் 1* | திங்கள் | விநாயகர் சதுர்த்தி |
| *20.09.2023* | *புரட் 3* | புதன் | ஷஷ்டி |
| *21.09.2023* | *புரட் 4* | வியாழன் | அனுஷம் |
| *25.09.2023* | *புரட் 8* | திங்கள் | ஏகாதசி |
| *27.09.2023* | *புரட் 10* | புதன் | ப்ரதோஷம் |
| *29.09.2023* | *புரட் 12* | வெள்ளி | பௌர்ணமி |
| *30.09.2023* | *புரட் 13* | சனி | மஹாளயபக்ஷாரம்பம் |
| *02.10.2023* | *புரட் 15* | திங்கள் | சங்கடஹர சதுர்த்தி |
| *03.10.2023* | *புரட் 16* | செவ்வாய் | க்ருத்திகை |
| *05.10.2023* | *புரட் 18* | வியாழன் | ஷஷ்டி |
| *10.10.2023* | *புரட் 23* | செவ்வாய் | ஏகாதசி |
| *14.10.2023* | *புரட் 27* | சனி | மஹாளய அமாவாசை |
| *15.10.2023* | *புரட் 28* | ஞாயிறு | நவராத்ரி ஆரம்பம் |

### 14.10.2023 சனிக்கிழமை - அமாவாசை

சோபக்ருது நாம ஸம்வத்ஸரே, தக்ஷிணாயணே வர்ஷ ருதௌ, கன்யாமாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸர: வாஸரஸ்து ஸ்திர வாஸர யுக்தாயாம் ஹஸ்த நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம்குண ஸகல விசேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ.

### க்ருஷ்ண ஜெயந்தி ஸங்கல்பம்

ஸோபக்ருத் நாம ஸம்வத்ஸரே/ தக்ஷணாயனே வர்ஷர்தௌ/ ஸ்ராவண மாஸே/ க்ருஷ்ண பக்ஷே/ ஸப்தம்யாம்/ சுபதிதௌ சௌமிய வாஸர க்ருத்திகா நக்ஷத்ர/ ஹர்ஷன யோக/ பாலவ கரண/ ஏவங்குன விசேஷண விஸிஸ்டாயாம் சப்தம்யாம் சுபதிதௌ மம சக குடும்பஸ்ய ஸ்ரீ கோபால க்ருஷ்ண ப்ரசாத சித்யர்த்தம் ஸ்ராவண க்ருஷ்ணாஸ்டமி புண்ய காலே சபரிவார ஸ்ரீ கோபாலகிருஷ்ண பூஜாம் கரிஸ்யே.

# அட்டைப்பட விளக்கம்

# ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி

மஹாவிஷ்ணுவின் ஒன்பதாவது அவதாரமே "ஸ்ரீகிருஷ்ண அவதாரம்". இந்த அவதாரம் பல அற்புதங்களும், லீலைகளும் நிறைந்தது. பகவான் கிருஷ்ணராக அவதரித்த தினத்தை நம் பாரததேசம் முழுவதும் **"கிருஷ்ண ஜெயந்தி", "கோகுலாஷ்டமி", "ஜென்மாஷ்டமி"** என்ற பெயர்களில் கொண்டாடப் பட்டு வருகிறது.

ஸ்ரீ கிருஷ்ணன் தக்ஷிணாயத்தில் ஆவணி மாதம் கிருஷ்ணபட்சத்தில் அஷ்டமி திதியில், ரோஹிணீ நக்ஷத்திரத்தில் தேவகீ வஸுதேவரின் புதல்வனாக நடுநிசியில் இருள் நிறைந்த சிறைச்சாலையில் (ஆவிர்ப்பவித்தார்) அவதரித்தார். "அஷ்டமி" என்றாலே எந்த சுபநிகழ்ச்சிகளையும் செய்யமாட்டார்கள். ஆனால் தம் பிறந்தநாளில் அந்த திதிக்கு முக்கியத்துவம் கொடுக்கச் செய்தவன் கண்ணன்.

**"சிவராத்திரி"** சிவனுக்கு சிறப்பு. **"நவராத்திரி"** அம்பாளுக்கு விசேஷம். **"ஸ்ரீராம நவமி"** ராமர் பெயரில் உள்ளது. **"கந்தஷஷ்டி"** சுப்பிரமணியருடைய பெயரில் இருக்கிறது. ஆனால் கிருஷ்ணனுக்கு மட்டும் அவர் பிறந்த இடமான கோகுலத்தையும் அவர் பிறந்த திதியான அஷ்டமியையும் வைத்து **"கோகுலாஷ்டமி"** என்று கொண்டாடப்படுகிறது. காரணம் ஸ்ரீகிருஷ்ண பகவான் முழுவதும் ஈஸ்வர ஸ்வரூபமாக அவதரித்தவர் மற்ற எல்லா அவதாரங்களும் **"அம்சாவதாரம்".** ஆனால் கிருஷ்ணாவதாரம் "பரிபூர்ணாவதாரம்".

கிருஷ்ண ஜெயந்தி அன்று பகவான் ஸ்ரீகிருஷ்ணர் நம் வீடு தேடி வருவதாக ஐதீகம். அதன் அடையாளமாக குழந்தை கிருஷ்ணனின் சின்னஞ்சிறு பாதங்களை

வீட்டு வாசலிலிருந்து பூஜை அறை வரை வரைவது வழக்கம். இந்த வழக்கம் எப்படி வந்தது? கிருஷ்ணன் குழந்தையாக இருந்தபோது கோகுலத்தில் வீடு வீடாகச் சென்று அந்த வீட்டில் பானைகளில் வைத்திருக்கும் பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றைத் திருடி தின்பானாம். அப்போது கீழே சிதறிய தயிர் வெண்ணெயில் கால்கள் பதிய அடுத்த வீட்டிற்கு ஓடிவிடுவானாம். அப்போது அந்த வீட்டில் அவனுடைய பாதங்கள் பதிந்துவிடுமாம். அதனால்தான் இன்றும் சிறிய பாதங்களை வரைகிறார்கள்.

ஸ்ரீகிருஷ்ணன் நள்ளிரவில் அவதரித்ததால் இரவில்தான் ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தியை கொண்டாடுவார்கள். அன்றைய தினம் காலையிலிருந்து உபவாசம் இருந்து ஸ்ரீமத் பாகவதத்தில் கிருஷ்ணனின் அவதாரத்தை விவரிக்கும் **“தசம ஸ்கந்தம்”** எனப்படும் பத்தாவது ஸ்கந்தத்தில் 3ம் அத்தியாயத்தை ஒருவர் படிக்க மற்றவர்கள் கேட்க வேண்டும். இரவில் ஸ்ரீகிருஷ்ணனின் விக்ரஹம் அல்லது படத்திற்கு புஷ்பங்களால் அலங்கரித்து கிருஷ்ண அஷ்டோத்ரம் சொல்லி முறுக்கு, சீடை, பால், வெண்ணெய், தயிர் முதலியவற்றை நைவேத்தியம் செய்து தீபாராதனை காட்ட வேண்டும். இதனால் பகவான் ஸ்ரீகிருஷ்ணனின் ஆசீர்வாதம் நமது இல்லத்திற்கும், நம் உள்ளத்திற்கும் கிடைக்கும்.

இந்த வருடம் **ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி 06.09.2023 புதன்கிழமை** சம்பவிக்கிறது.

**பூஜை செய்ய ஸங்கல்பம் பக்கம் எண் : 7**

தொகுப்பு : **D. சூரியநாராயணன்**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 53

## அத்தியாயம் – 3

## கர்ம யோகம்

இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் முதல் இரண்டு ஸ்லோகங்களில் அர்ஜுனன் பகவானிடம் கீழ்க்கண்டவாறு கேட்கிறான்.

**"ஜனார்தனா"** கர்மத்தைக் (தொழிலை) காட்டிலும் ஞானமே (அறிவே) சிறந்தது என்று நீ எண்ணுகிறாய் என்றால், என்னை ஏன் இந்தக் கோரமான காரியத்தில் ஏவுகிறாய் கேசவா?

பகவான் அர்ஜுனனின் கேள்விக்கு நேரிடையாக பதில் கூறாமல் 3ம் ஸ்லோகம் முதல் அர்ஜுனனை தெளிவாக்குகிறார்.

ஸ்ரீ பகவானுவாசா :

**லோகேஸ்மின்த்3 விவிதா4 நிஷ்டா2 புரா ப்ரோக்தா மயானக4/**

**ஞானயோகே3ன ஸாங்க்2யானாம் கர்மயோகே3ன யோகி3னாம்//**

**(கீதை3-3)**

**பொருள் :** பாபமற்றவனே, தத்வ விசாரம் செய்கிறவர்களுக்கு **"ஞானயோகம்"** என்றும், அதை அனுஷ்டிக்கிறவர்களுக்கு **"கர்மயோகம்"** என்றும் இரண்டு நன்னெறிகள் முன்பே என்னால் இயம்பப்பட்டிருக்கின்றன.

**"லோகேமின்த்3 விவிதா4 நிஷ்டா2"** = "திவிவிதம்" என்றால் இரண்டு என்றும் "நிஷ்டா" என்றால் **"நன்னெறிகள்"** (சம்ப்ரதாயம்) என்றும் பொருள். இந்த லோகத்தில் இரண்டு சம்ப்ரதாயங்கள் (நன்னெறிகள்) உண்டு. அவை **"ஞானயோகே3ன ஸாங்க்2யானாம்**

**கர்மயோகே³ன யோகி³னாம்”** ஸாங்க்யன்மார்களுக்கு ஞானயோகமும், யோகிகளுக்கு கர்மயோகமும் இவை இரண்டும் என்னால் முன்பே கூறப்பட்டது என்று பகவான் கூறுகிறார்.

*(இரண்டாம் அத்தியாயத்தில் 39ஆவது ஸ்லோகத்தில் பகவான் இரண்டு விதமான முறைகளை விளக்குகிறார் “ஸாங்கிய யோகம்” “கர்மயோகம்” அல்லது “புத்தியோகம்”. “வேதபாரதி செய்திகள்” 2022 ஆம் வருடம் ஜனவரி மாத இதழில் இந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது)*

**“கர்மயோகம்”** என்றால் கர்மத்தில் யோகம் என்று பொருள் அல்ல. கர்மம் செய்கின்றவனும் ஞானத்தை அடைகிறான். ஆனால் அவனுடைய ஞானம் அவன் செய்யும் கர்மத்தில் இருக்கிறது.

ஸ்ரீராமனிடம் கைகேயி **“நீ காட்டிற்குப் போகவேண்டும்”** என்று கூறியதும் ஸ்ரீராமர் சிறிதுகூட அதிர்ச்சி அடையவில்லை, தளரவில்லை, கவலைப்படவில்லை. தன் மனைவி சீதையை விட்டுவிட்டு போவதற்குக் கூட அவர் வருந்தவில்லை. தாயின் கட்டளையை அமைதியுடன் ஏற்றுக்கொண்டார். காரணம் அவர் ஞானத்தால் உயர்ந்து உறுதியான மனத்துடன் இருந்தார். ஆனால் சீதை அனுபவத்தின் மூலம் மட்டுமே பாடம் படித்துள்ளார். அனுபவத்தின் மூலம் பாடம் படித்து வாழ்க்கையில் கடந்துபோவதை **“கர்மயோகம்”** என்றும் ஏற்கனவே ஞானத்தை அடைந்து அதன்பிறகு கர்மத்தை கடந்து போவதை **“ஞானயோகம்”** என்றும் கூறுவார்கள். அதனால்தான் ஒருவருக்கு ஞானமும் வேண்டும் கர்மமும் வேண்டும்.

**"ப்ரகலாதன்"** பிறப்பதற்கு முன்பே ஞானத்தை அடைந்தான். ஆனால் **"துருவன்"** தனக்கு ஏற்பட்ட அனுபவத்தின் வாயிலாக ஞானத்தை அடைந்தான்.

ஞானமும் கர்மமும் எப்படி ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்டவை என்பதற்கு விடை அடுத்த ஸ்லோகத்தில் வருகிறது.

கர்மயோகம் தொடரும்...

# வேதபாரதி செய்திகள்

**அக்டோபர் மாதம் 2023 ஆம் ஆண்டு 10-ம் ஆண்டில் உங்கள் ஆதரவுடன் அடியெடுத்து வைக்கிறது.**

வாசகர்கள், கட்டுரையாளர்கள், விளம்பரதாரர்கள், சந்தாதாரர்கள் எல்லா நலமும் பெற்று வாழ வேதபாரதி வாழ்த்துகிறது.

அடுத்த மாதம் முதல் புதிய கட்டுரைகள், புதிய பொலிவுடன் அதிக பக்கங்களுடன் தங்கள் இல்லம் தேடி வரவுள்ளது.

- ஆசிரியர்

## திருமண வாழ்த்து

வேதபாரதியின் வேத வகுப்பு ஒருங்கிணைப்பாளர்
ஸ்ரீ R. மகாலிங்கம் - ஸ்ரீமதி ராதா மகாலிங்கம்
குமாரத்தி
**சௌ.M. மதுர்ஷாலினி - சிரஞ்சீவி.S. ராகேஷ்** அவர்கள்
திருமணம் 10.09.2023 அன்று சென்னை ECR -ல்
உள்ள **MCC MARRIAGE HALL**-லில் நடைபெற
உள்ளது. மஹா ஸ்வாமிகள் அனுக்ரஹத்துடன்
எல்லா நலமும் வளமும் பெற்று வாழ வாழ்த்தும்
வேதபாரதி.

# ஸ்ரீமத் பாகவதம்

*(ஸத்யம் பரம் தீமஹி)*

பரிதி பகுதி - 32

## ஸ்கந்தம் 3

### கபில பகவான் அவதாரம்

### (ஸ்கந்தம் 3 = அத்தியாயம் 32, 33)

*கபிலர் தன் தாய்க்கு ஜீவனின் கதியைப் பற்றி கூறிய பின் பக்தியின் மேன்மையை பற்றி விளக்கி கூறினார்.*

*தாயே! பகவானுடைய திருவடிகளையே எப்போதும் நினைத்துக் கொண்டேயிருங்கள். அவருடைய கல்யாண குணங்களைக் கேட்டாலே பக்தி பெருகும். அந்த பக்தியால் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றையும் அவருக்கே அர்ப்பணம் செய்யுங்கள். பகவான் வாசுதேவனின் குணங்களை ஆர்வத்தோடு கேட்க கேட்க பக்தியும், உலக விஷயங்களில் வைராக்கியமும் தானே வரும்.*

*பரபிரம்மன் ஒன்றுதான். அதுவே* **“பரமாத்மா” “ஈஸ்வரன்” “பகவான்” “புருஷன்”** *என்று பலவாறாக அறியப்படுகின்றான். (பா 3-32-26)*

*உதாரணமாக* **“பால்”** *என்பது ஒரே வஸ்துதான். ஆனால் அது கண்ணுக்கு வெண்மையாகவும் நாவுக்கு இனிமையாகவும், ஸ்பர்சத்தால் தண்மையாகவும் இருக்கிறது அல்லவா? அது போல் பரப்பிரம்மன் ஸ்வரூபம் ஒன்றுதான்.*

*பக்தி நான்கு வகைப்படும் என்று கபிலர் தன் தாய்க்கு கூறுகிறார்.*

**1. ஸாகம பக்தி :** *பகவானிடம் பலன்களை எதிர்பார்த்து பக்தி செலுத்துவது. (உலகில் பெரும்பாலானவர்கள் இவ்வகையான பக்தியை உடையவர்களாகத்தான்*

இருக்கிறார்கள்)

**2. நிஷ்காம பக்தி :** கர்மபலனை பகவானுக்கு சமர்ப்பணம் செய்வது.

**3. ஸகுண பக்தி :** பிரஹ்லாதன் கூறிய நவவித பக்தி (ஸ்ரவணம், கீர்த்தனம் முதலியவை)

**4. நிர்குண பக்தி :** இதுவே பிரேம பக்தி, பகவானை நினைத்த மாத்திரத்திலேயே கண்களில் நீர் பெருகுவது.

கணவனைப் பிரிந்த தேவஹூதி புத்திரன் கபிலரின் ஞானோபதேசத்தைக் கேட்டு அஞ்ஞானத் திரை நீங்கப் பெற்று கபிலரை வணங்கிப் பலவாறு துதித்தாள். பின் பிந்துஸரஸின் கரையிலேயே யோகாப்யாசம் செய்து மனத்தை அடக்கி பகவானுடைய பாதத்தை அடைந்தாள்.

மஹாயோகியும், ஸர்வக்ஞனுமான கபிலர் தாயாரிடம் விடைபெற்றுக் கொண்டு பிதாவான கர்த்தமருடைய ஆசிரமத்திலிருந்து வடகிழக்கு திக்கை நோக்கி சென்றார். ஸித்தர்களும், சாரணர்களும், கந்தர்வர்களும், முனிவர்களும் அவரைத் துதித்துக்கொண்டே பின் சென்றனர். வடகிழக்கு எல்லையில் அவரை ஸமுத்திரராஜன் வரவேற்று உபசரித்து இடமளித்தான். அங்கு கபிலர் உலகநலனுக்காக யோகம் மேற்கொண்டு விளங்கிவருகிறார்.

கபிலர் வாசம் செய்யும் இடம்தான் "கபிலாரண்யம்". அந்த இடம்தான் தற்போது அமெரிக்காவில் உள்ள **"கலிபோர்னியா"** என்று மஹாபெரியவா ஒரு உரையில் கூறியுள்ளார்.

**ஸ்ரீமத் பாகவதத்தின் மூன்றாம் ஸ்கந்தம் முற்றிற்று.**

அடுத்த மாதம் முதல் நான்காம் ஸ்கந்தம் ஆரம்பம்.

தொடரும்...

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

ஆதவன் அத்தியாயம் – 6 அவதார மஹிமை பாகம் 23

## முதல் சிஷ்யனின் வருகை

*ஸ்ரீ சங்கரருடைய முதல் சிஷ்யன் ஸ்ரீஸநந்தனுடைய குரு பக்தியை உலகம் அறிய நடந்த அதிசய நிகழ்வு.*

ஒரு நாள் ஸ்ரீசங்கரர் கங்கையில் குளித்துவிட்டு ஈர ஆடையுடன் இருந்தார். கங்கையின் எதிர் கரையில் ஸ்ரீஸநந்தர் குருவின் ஆடைகளை உலர்த்திக் கொண்டிருந்தார். ஸ்ரீ சங்கரர் ஸ்ரீஸநந்தரை அழைத்து தமக்கு உலர்ந்த ஆடையை எடுத்துவருமாறு கூறினார்.

குரு ஆக்ஞை இட்டுவிட்டால் அதைத் தட்டாமல் உடனே பண்ணிவிட வேண்டும் என்ற ஸ்மரணையில் தான் ஸ்ரீஸநந்தர் இருந்தார். குரு ஈர வஸ்திரத்தில் இருப்பது அவருக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

நதியைக் கடந்து அக்கரைக்குச் செல்ல படகில் செல்லலாம் என்றுகூட அவருக்கு எண்ணம் வரைவில்லை. குரு நம்மை உடனே ஆடையை எடுத்துவரச் சொன்னார் என்ற ஒரே எண்ணம்தான் அவர் மனதில் இருந்தது.

ஆளை விழுங்குகிற மாதிரி ஆழமான கங்கை நதி ஓடுவது தெரியாமல் குருவின்மீது இருந்த பக்தியால் சாதாரண நிலத்தில் நடப்பதுபோல் அந்த பிரவாகத்தின்மேல் நடக்க ஆரம்பித்தார்.

என்ன ஒரு அற்புதம்! ஸ்ரீஸநந்தர் பாதம் பதித்த இடங்களிலெல்லாம் அவர் நடப்பதற்கு சாதகமாக கங்காதேவி ஒரு தாமரையைப் புஷ்பித்து அவருடைய பாதத்தைத் தாங்கினாள். அவரும் தாமரைகளின் மீது நடக்கும் உணர்வு இல்லாமல் நடந்து அக்கரையில்

உள்ள குருவை அடைந்து வஸ்திரத்தை ஸமர்ப்பித்தார்.

ஸ்ரீசங்கரர் ஏதும் அறியாதவர் போல் "குழந்தாய் நீ எப்படி இந்த கங்கையைக் கடந்தாய்? என்று கேட்டார். அதற்கு சனந்தர், "தங்களை தியானித்தால் பிறவியாகிய பெருங்கடலே முழங்கால் அளவு ஆகிவிடும்போது இந்த கங்கையின் ஆழம் எம்மாத்திரம் குருவே?" என்றான்.

இதைக்கேட்ட ஸ்ரீசங்கரர் "சனந்தா உன் பக்தி அபூர்வமானது. நீ கங்கையை எப்படி கடந்தாய் என்பதைத் திரும்பிப் பார்" என்றார்.

சனந்தர் கங்கையைத் திரும்பி பார்த்தார். அவர் விரைந்து நடந்துவந்த பாதையெல்லாம் அழகிய தாமரை பூக்கள் மலர்ந்திருந்ததைப் பார்த்தார். கண்களில் நீர் மல்க தன் குருநாதரை வணங்கினார்.

உன் பாதங்களை தாமரை மலர்கள் தாங்கிக்கொண்டதால் இன்று முதல் நீ "பத்மபாதர்" என்று அழைக்கப்படுவாய் என்று தன் முதல் சீடரை வாழ்த்தினார் ஸ்ரீசங்கரர்.

எவர் ஒருவர் தன் குருவிடம் நம்பிக்கையோடு சரணாகதி அடைகிறாரோ அவருடைய தேவைகளை குரு கவனித்துக்கொள்வார்.

ஒரு நாள் ஸ்ரீசங்கரர் கங்கையில் குளித்துவிட்டு தம் சிஷ்யர்களுடன் மணிகர்ணிகாவிலிருந்து அன்னபூர்ணே கோவிலுக்கு வரும்போது....

தொடரும்.....


## வேத வகுப்புகள் ஆரம்பம்

வேதபாரதியின் வேதவகுப்பு **குருஜி**
**ஸ்ரீமான் கைலாச கனபாடிகள்** தலைமையில்
வார இறுதி நாட்களில் மாலை 6.00 மணி முதல் வேத வகுப்புகள் ஆரம்பமாக உள்ளது. உபநயனமான அந்தண சிறுவர்கள் பெரியவர்கள் கலந்து கொண்டு பயனடைய வேண்டுகிறோம்.

தொடர்புக்கு : **9443495950**

## அறுபத்தி மூன்று (63) நாயன்மார்கள்

*அருணன்* *9/63*

## 9. மானக்கஞ்சாற நாயனார்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கு அருகே வடக்கில் சுமார் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கிராமம் **“ஆனந்த தாண்டவபுரம்”.** இந்த ஊருக்கு அந்த காலத்தில் **“கஞ்சாறு”** என்று பெயர். அந்த ஊரில் **“மானக்கஞ்சாறர்”** என்ற சிவ பக்தர் வாழ்ந்துவந்தார். இறைவன் அருளால் நல்ல செல்வந்தராக இருந்த அவர் தாம் பெற்ற செல்வத்தை அடியார்களுக்கு கொடுத்து வாழ்ந்துவந்தார்.

அவருக்கு நெடுங்காலமாக குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது. பலகாலம் மனம் வருந்தி இறைவனை வேண்டியதில் அவருடைய திருவருளால் அழகிய பெண்குழந்தை பிறந்தது. அக்குழந்தையை அவரும் அவருடைய மனைவியும் சீரும் சிறப்புமாக வளர்த்தார்கள். அவளுக்கு மணம்முடிக்கும் பருவம் வந்ததும் அவளை தக்க இடத்தில் மணம் முடிக்க விரும்பினர். பல இடங்களில் மணமகனைத் தேடி கடைசியில் **“ஏயர்கோன்கலிகாமர்”** என்ற சிவ பக்தருக்கு தன் மகளை மணமுடிக்க ஏற்பாடுகளைச் செய்தார்கள். திருமணம் நிச்சயிக்கப்பட்டது.

பொழுது விடிந்தால் திருமணம் என்ற நிலையில் இறைவன் மானக்கஞ்சாறர் சிவனடியார்களிடம் கொண்டிருந்த மாறாத பக்தியை உலகுக்கு உணர்த்த விரும்பினார். இறைவன் சிறந்த சிவனடியார் வேடமிட்டு திருமண வீட்டிற்கு வந்தார். சிவனடியாரைக் கண்டதும் அவரை அன்புடன் வரவேற்ற மானற்கஞ்சாறர், இன்னும் சற்று நேரத்தில் தன் ஒரே மகளுக்கு திருமணம் நடக்க இருப்பதாகவும்

திருமண சமயத்தில் சிவனடியாரின் வரவு மகிழ்ச்சி அளிப்பதாகவும் கூறி அவரிடம் ஆசி பெற மகளை அழைத்துவந்து சிவனடியாரின் பாதங்களை விழுந்து வணங்கச் செய்தார்.

அவளுடைய நீண்ட அடர்த்தியான கருங்கூந்தலைக் கண்ட சிவனடியார் (இறைவன்) மானக்கஞ்சாறரைப் பார்த்து "உன் மகளுடைய தலைமுடி எம் மார்பில் அணியக்கூடிய **"பஞ்சவடி"** என்ற மயிற்கற்றை பூணூலாக வேண்டும்" என்றார். (பஞ்சவடி" என்பது தலை முடியால் அகலமாகப் பின்னப்பட்டு மார்பில் அணியும் ஒரு வகை பூணூல். இத்தகைய பூணூலை பெரும் தவஸிகளே அணிவர்)

சிவனடியார்கள் எதைக் கேட்டாலும் உடனே வழங்கும் இயல்புடைய மானக்கஞ்சாறர் சிவனடியார் கேட்டதும் மகிழ்ந்து தன் மகள் திருமணக் கோலத்தில இருக்கிறாள் என்பதையும் மறந்து ஒரு நிமிடம் கூட தாமதியாமல் வாளால் தன் மகளின் நீண்ட அலங்கார கூந்தலை அடிவரை அரிந்து தம் கையில் ஏந்தி சிவனடியாரிடம் நீட்டினார்.

அதை வாங்குவதற்கு கை நீட்டியவராக இருந்த சிவனடியார் மறைந்தார். அதே நேரம் வானில் உமையம்மையுடன் அம்மையப்பராகக் காட்சியளித்த சிவபெருமான் உன் அன்புத்திறத்தை உலகறியச் செய்தோம். தொண்டுகள் பல புரிந்து எம்மை வந்து அடைவீராக" என்று வாழ்த்தினார். கூத்தன் அருளால் கூந்தல் மீண்டும் வளர்ந்தது.

ஏயர்க்கோன் கலிகாமன் தன் சுற்றத்தினருடன் வந்து "சிவனின் அருளைப் பெற்றவளே தன்னுடைய மனைவியாக வரப்போகிறாள்" என்று மகிழ்ந்து அவளை மணந்தார்.

ஒரு குறிக்கோளை உடையவர் அதனைக் கடைபிடிக்கையில் என்ன தடை வந்தாலும் சலியாமல்

ஒழுகினால் அவர் சிறந்த நிலையை அடைவார்.

மணக்கோலத்தில் இருந்த தன்னுடைய ஒரே மகளின் அழகிய கூந்தலை அரிந்து கொடுத்த மானக்கஞ்சாற நாயனாரை "சுந்தரர்" தம் திருத்தொண்டைத் தொகையில் **"மலைமலிந்த தோள் வள்ளல் மானற்கஞ்சாறன்"** என்று புகழ்கிறார்.



நாயன்மார்கள் கதை தொடரும்......

## சஷ்டியப்த பூர்த்தி

16.09.2023 சனிக்கிழமை வேதபாரதியின் பெண்மையைப் போற்றுவோம் பொறுப்பாளர் **ஸ்ரீ உ.வே.மாதவன் ஐயங்கார்** அவர்கள் தம்பதியருக்கு திருவல்லிக்கேணி **ஸ்ரீ ராகவேந்திரா மண்டபத்தில்** சஷ்டியப்த பூர்த்தி நடைபெற உள்ளது. இறைவன் பேரருளால் ஸதாபிஷேகம், கனகாபிஷேகம் செய்து கொண்டு சிறப்புடன் வாழ வாழ்த்துகிறோம்.

**வேதபாரதி.**

## ஔவையார்

# "மூதுரை"

*"**மூதுரை**" = முதுமை + உரை = மூதுரை பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டிருப்பதால் "**மூதுரை**" என அழைக்கப்படுகிறது. இந்நூலில் மொத்தம் 30 வெண்பாப் பாடல்கள் அமைந்துள்ளன.*

## வெண்பா 12

**மடல் பெரிது தாழை : மகிழ் இனிது கந்தம்**
**உடல் சிறியர் என்று இருக்கவேண்டா-கடல் பெரிது**
**மண்ணீரும் ஆகாது: அதன் அருகே சிற்றூறல்**
**உண்ணீரும் ஆகிவிடும்.**

**பொருள் :** தாழம்பூ பெரிய மடல்களைக் கொண்டது. ஆனால் அதன் மணத்தை யாரும் விரும்புவதில்லை. மகிழம்பூ சிறியது இதன் மணத்தை எல்லோரும் விரும்புகின்றனர். எனவே உடலில் சிறியவர் என்று யாரையும் மதிப்பிடக்கூடாது. அவருடைய பயனைக் கொண்டே அவரை மதிப்பிடவேண்டும். கடல் பெரியது ஆனால் அதன் நீர் குளிப்பதற்கு கூட பயன்படாது. ஆனால் அதன் அருகே தோண்டப்படும் ஊற்று நீர் குடிப்பதற்கு பயன்படும்.

**விளக்கம் :** இந்த பாடலில் ஔவை பாட்டி பெரிய மடல் கொண்ட தாழம்பூவையும், சிறிய பூவான மகிழம்பூவையும் உவமையாக்கி பாடுகிறார். அதே போல் கடல் நீரையும் அதன் அருகில் தோண்டப்படும் நீரையும் உவமையாக்குகிறார். ஆனால் "உடல் சிறியர் என்று இருக்க வேண்டாம்" என்று ஒரு வரியில் உண்மையைச் சொல்லுகிறார்.

தொகுப்பு : **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** வேளச்சேரி

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## திருப்தி



சென்றமாத தொடர்ச்சி...


விஷ்ணுவுக்கு சிவனின் நிலையை அடைந்துவிட வேண்டுமென்ற ஏக்கம் இருக்கும். உண்மையில், எவர்தான் ஆசைகளின் எல்லையை அடைந்திருப்பார்?' என்று கூறியிருக்கிறார்கள்.

இவ்விடத்தில் நகைச் சுவையுடன் கூடிய ஒரு சுலோகத்தின் பொருளை நினைவு கூர்வது மிகவும் பொருத்தமாயிருக்கும். 'ஒரு மலை மிகப் பெரியது, மலையைக் காட்டிலும் பெரியது கடல். கடலைவிட பரந்து விரிந்து காணப்படுவது ஆகாயமாகும். அந்த ஆகாயத்தைக் காட்டிலும் பெரியவர் இறைவன். அந்த இறைவனையும்விட விசாலமாய் இருப்பது ஆசையே!"

அதிருப்தியானது ஒருவனை பரிதாபகரமான நிலைக்குத் தள்ளி விடுகிறதென்றால், திருப்தியோ அவனுக்கு நிலையான ஆனந்தத்தையளிக்கிறது. வைராக்கியத்தோடு உள்ளவர் திருப்தியோடு இருப்பான்; திருப்தி வைராக்கியத்தை வளர்க்கிறது.

முற்றும்.

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்




*3-7 சென்றமாத தொடர்ச்சி..*

*ஏன் கணிதத்திலும் கூட முரண்பாடுகள் உள்ளன. உண்மையில் குர்த் காடெல் (Kurtgodel) என்பவரைப் போன்ற பெரிய தர்க்க வல்லுநர்கள், கணிதரீதியான தர்க்கத்தின் மூலம், ஓர் ஆச்சரியமூட்டும் முடிவைநிரூபித்துள்ளார்கள். ஒன்று இரண்டு மூன்று என இயல்பான எண்களைக் கொண்டு எண்ணுவதை அடிப்படையாகக் கொண்ட கொள்கை எதுவுமே, முரண்பாடு கொண்டதாகவோ, நிறைவு பெறாததாகவோ அல்லது இரண்டுமாகவோ தான் நிச்சயமாக அமையும் என்பதே அந்த முடிவு. ஆனால், வேதக்கோட்பாடுகளோ அபூர்வமான தனித்தன்மை கொண்டவை; ஏனெனில் அவற்றில் எண்ணுதல் இல்லை. படைப்பின் பன்முகத்தன்மை அறிவால் மட்டுமே அறியப்படுவது. ஆனால், ஒவ்வொன்றின் உட்பொருளும் ப்ரஹ்மனே, எனவே, வேதத்தின் கொள்கையில் எண்ணிக்கை எதுவுமில்லை. எனவே குர்த் காடெல் குறிப்பிடுகிற முரண்பாடுகளோ, நிறைவின்மையோ வேதத்தில் கிடையாது. இதை ஓர் உதாரணத்தின் மூலமாக விளக்குவோம்.*

தொடரும்...

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## பாவம் என்பது என்ன? புண்ணியம் என்பது என்ன?



எதை நாம் செய்யக்கூடாது என்று தோன்றுகிறதோ அதுதான் பாவம். எதைச் செய்வது, நல்லது என்று தோன்றுகிறதோ, அதுதான் புண்ணியம்.

ஆசை இல்லாமல் ஒரு காரியத்தை செய்தால் அது பாவம் இல்லை; ஆசைப்பட்டு ஒன்றைசெய்தால் அது பாவம்.

நாம் வாயாலும், மனதாலும், பணத்தாலும் இந்த தேகத்தாலும் பாவம் செய்கிறோம். வாயினால் உற்சாகமாக புரளி செய்கிறோம். பணத்தாலும் பலவகையாக பாவம் செய்கிறோம்.

நாம் இது போன்ற பாவங்களை செய்யக்கூடாது என்று நினைத்தாலும் அப்படி இருக்க முடிவது இல்லை. பிசாசு போல் பாவம் செய்யும் பழக்கம் நம்மை பிடித்துக்கொண்டு இருக்கிறது. நம்மை விடாமல் சுற்றிக்கொண்டே இருக்கிறது.

நிறைய பாவம் செய்கிறோம். அதனால்தான் அந்த பழக்கத்தை விடமுடியவில்லை. அந்த பழக்கத்தை எப்படி போக்குவது? கயிற்றை எப்படி சுற்றினோமோ அப்படியே அவிழ்க்க வேண்டும். எந்த நாக்கினால் பாவம் செய்ய பழகிக் கொண்டோமோ, அந்த நாக்கினாலேயே புண்ணியம் செய்யவும் பழகிக்கொள்ள வேண்டும். அதே போல் மனதாலும், தேகத்தாலும், பணத்தாலும் செய்த பாவத்தை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

## "புதுவையில் திருப்பதி பெருமாள்"

திருமலை திருப்பதி தேவஸ்தானம், ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமி புதுவை வரலாற்றில் முதல் முறையாக "ஊஞ்சல் சேவை" மற்றும் "புஷ்ப சேவை" ஆகியவற்றிற்காக கடந்த சோபகிருது, ஆடிமாதம் 7ந்தேதி, 23.07.2023 ஞாயிற்றுக்கிழமை புதுவையில் எழுந்தருளினார்.

புதுச்சேரி வேதபாரதியின் ஏற்பாட்டில் புதுச்சேரியின் மிகப்பிரபலமான "சங்கமித்ரா கன்வென்ஷன் சென்டரில்" எழுந்தருளி காலை 6.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை தன்னை நாடி வந்த பக்த பெருமக்களுக்கு சேவை சாதித்தார்.

முன்னதாக முதல்நாள் இரவு சென்னையில் இருந்து புதுச்சேரிக்கு வருகை புரிந்த ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமிக்கு மார்கழி பஜனோத்ஸவ கமிட்டி தலைவர் ஸ்ரீ M. சிவசங்கர், MLA., தலைமையில், தமிழ்நாடு வேதபாரதி பொதுச்செயலாளர் ஸ்ரீ.R.வெங்கட்ராமன் முன்னிலையில் புதுவை வேதபாரதியின் நிர்வாகிகளும், விழாக்குழுவினரும் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

காலை திருமஞ்சனம், ஊஞ்சல் சேவை, புஷ்ப சேவை என ஒவ்வொரு நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றது. புஷ்ப சேவைக்காக மூங்கில் தட்டுகளில் வண்ணம் பூசி விதவிதமான புஷ்பங்களை அதில் நிரப்பி மேடைகளில் வைக்கப்பட்டிருந்த விதம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்து கவர்ந்தது. அக்ஷய பாத்திரம்போல் அள்ள அள்ள குறையாது வேங்கடவனின் திவ்ய திருப்பாதங்களில் புஷ்பங்கள் அர்ப்பணிக்கப்பட்டது.

பெருமாள் சேவை சாதித்த ஏழு மணி நேரத்தில்

கிட்டத்தட்ட பதிமூன்றாயிரம் பேர் தரிசனம் செய்துள்ளனர். காலை சேவை துவங்கியதிலிருந்து கடைசிவரை அனைவருக்கும் குறைவில்லாது அன்னதானம் வழங்கப்பட்டது. கண்குளிர வேங்கடவனை கண்டு மனம் குளிர்ந்து வயிறும் நிறைத்து சென்றனர் வந்திருந்த பக்த சேவார்த்திகள்.

பெரும் பொருட்செலவில் மிக பிரம்மாண்டமான ஏற்பாட்டில் நடைபெற்றஸ்ரீ வேங்கடவனின் ஊஞ்சல் மற்றும் புஷ்ப சேவைக்கு காவல் துறையின் பாதுகாப்பும் மற்றஅரசுத் துறைகளின் ஒத்துழைப்பும் இந்நிகழ்ச்சிக்கு உதவிகரமாக இருந்தது.

புதுச்சேரி வேதபாரதியின் நிகழ்ச்சிகளில் ஒரு மைல் கல்லாக அமைந்த இந்த வைபவம், புதுவை வேதபாரதி நிர்வாகத்தினர் மற்றும் இந்த விழாவிற்கான பிரத்யேக கமிட்டி உறுப்பினர்கள், விழாக்குழுத் தலைவர் திரு.M.சிவசங்கர், MLA., அவர்கள் தலைமையில் மிக நேர்த்தியாக சிறப்பாக செய்திருந்தனர்.

**-ஆதிரையன்**

## இரங்கல் செய்தி

வேதபாரதியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த **ஸ்ரீ V. சௌந்தரராஜன்** அவர்களின் மனைவி **ஸ்ரீமதி. சந்திரா 24.08.2023** அன்று இறைவன் பாதம் சென்றடைந்தார்கள். அம்மாவை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு வேதபாரதியின் ஆழ்ந்த அனுதாபங்கள். இந்த பேரிழப்பை தாங்கும் வலிமையை இக்குடும்பத்தாருக்கு வழங்க இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

வேதபாரதி.

# ஔவை விழா 2023

30.07.2023 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ சங்கர வித்யாலயா, கிழக்கு தாம்பரம் பள்ளியில் ஔவை விழா நடைபெற்றது. 12 பள்ளிகளிலிருந்து 100க்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டனர். 6 நடுவர்கள் குழந்தைகளுக்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஒப்புவித்தல் போட்டிகளை நடத்தினார்கள்.

காலை 9.30 மணி முதல் 11.00 மணிவரை போட்டிகள் நடைபெற்றன. திருமதி.சிவகாமசுந்தரி இறைவணக்கம் பாடினார். தாம்பரம் ஸ்ரீ ராமசுப்ரமணியன் ஜி வரவேற்புரை வாசித்தார். ஸ்ரீ சங்கரா கல்வி குழுமம் தாளாளர் ஸ்ரீ ஆர்.சங்கர் அவர்கள் பழந்தமிழ் நூல்களின் பெருமைகள் குறித்து சிறப்புரை ஆற்றி, குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கி ஊக்கப்படுத்தினார்.

திருச்சி ஸ்ரீ சந்திரசேகர் ஜி வேதபாரதி அமைப்பின் செயல்பாடுகள் மற்றும் பாரதப்பண்பாட்டு செய்திகளை போட்டிகள் நடக்கும் போது பெற்றோர்களிடையே கூறினார். தீபம் அறக்கட்டளை மூலம் பெரியவர்களுக்கும், குழந்தைகளுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. கடந்த ஒரு மாத காலமாக தாம்பரம் ஸ்ரீ ராமசுப்ரமணியம், ஸ்ரீ நாராயணன் அவர்களும் நிகழ்ச்சியினை வடிவமைத்தல், பள்ளிகள் தொடர்பு விழா சிறக்க செய்ய வேண்டிய ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்து கொடுத்தார்கள். சான்றிதழ்கள் எல்லா பள்ளிகளுக்கும் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

ஆசிரியர்.

# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்

வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,
சென்னை - 600 042.




- 800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.
- சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.
- உறவினர்கள் தங்க - குளிரூட்டப்பட்ட அறைகள்.
- விசாலமான கார் பார்க்கிங்.
- வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.
- நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.
- 24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.

தொடர்புக்கு

**48625585 / 9840545585**

## ஔவை விழா 2023, சென்னை





## யுவஸ்ரீ பயிலரங்கம் திருச்சி 2023



## ஔவை விழா குத்தாலம் - 2023




வேதஸ்ரேணி
Mini Function Hall (A/C)
Traditional Ambience with Modern Amenities
Ayush Homam | Upanayanam | Birthdays | Engagement |
Sangeeth | Mehendi | Wedding | Valakaapu | Seemandham |
Shastiapthapoorthi | Sathabhishekam | Corporate Events
Ac Hall & Dining | Lift | Power Back Up | Car Parking |
CCTV | Hall Capacity- 150 -200 | Guest Rooms-2
Vedashreni, No 215, 3rd Street, Ramnagar Vijayanagar, Velachery, Chennai-42
95002 67471 | 98414 46897
VEG FOOD ONLY


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Shri Meera Labs Pvt Ltd
Contact
9952972436 / 7824807801
WOPPER

## அறிவோம் ஆழ்மனதின் அளப்பறியா ஆற்றல்

**திருச்சி கணேசன்**

*சென்ற மாத தொடர்ச்சி...*

*அப்போது நாம் கீழ்கண்டவாறு 25 அல்லது 30 முறை முழு நம்பிக்கையோடு ஒரே சிந்தனையுடன் முனைப்பாக நம் காதில் விழும்படி ஓரளவு சத்தமாகக் கூற வேண்டும்.*

*1. என்னால் முடியும் என்னால் முடியும் எதையும் சாதிக்க என்னால் முடியும்*

*2. வெற்றி பெறுவேன் சாதித்து முடிப்பேன்*

*3. அனைத்து பாடங்களிலும் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற என்னால் முடியும்.*

*4. தேர்வுகளில் 1190/1200 பெற்று மாநிலத்திலேயே முதல் மாணவன் / மாணவியாக வர என்னால் முடியும்.*

*மேலே கூறியுள்ளபடி திடமான தன்னம்பிக்கையுடன் கூற வேண்டும். இவ்வாறு செய்வதற்கு 3 நிமிடங்கள் ஆகலாம்... நமது வெற்றிக்காக தினமும் காலையிலும் இரவிலும் ஒரு நாள் கூட தவறாது கூறி சில நிமிடங்கள் செலவழிப்பது ஓர் உத்தமமான செயலாகும். முதல் சில நாட்களுக்கு இவ்வாறு சிறிது உரக்கக் கூறுவதற்கு தயக்கமாகவும் சந்தேகமாகவும் வெட்கமாகவும் இருக்கலாம். ஆனால் இதை ஒவ்வொரு இரவு படுக்கச் செல்லும் முன்னும் மீண்டும் காலை எழுந்தவுடனும் விடாமல் சொல்ல வேண்டும். இரவு படுக்கச் செல்லும் முன் சொல்லுவதால் நாம் தூங்கும் போதும் நம் ஆழ்மனம் இதே சிந்தனையாக இருப்பதால் நமது எண்ணம் செயல் வடிவாகி வெற்றியடையும் சாத்தியக்கூறுகள் அதிகரிக்கும் நமது ஆழ்மனம், நாள் முழுவதும், இரவு முழுவதும் வேலை செய்து கொண்டே இருக்கும். இந்த முறையில் நாம் முழு நம்பிக்கையோடு அதே சிந்தனையுடன் ஈடுபடுவதால் வெற்றியை சுலபமாக அடைய முடியும்.*

*மனச்சித்திரம் பார்த்தல் :*

*சுமார் 15 நாட்கள் இவ்வாறு தினமும் இரவிலும் காலையிலும் சுயகருத்தேற்றம் மூலம் ஆழ்மனதிற்குக் கட்டளை இட்ட பிறகு 16 ஆவது நாள் முதல் சுய கருத்தேற்றத்தைக் கூறிவிட்டு அதன் பின்னர் நம் குறிக்கோளை அடைந்து விட்டதாக கற்பனை செய்து நம் மனத்திரையில் வெற்றி பெற்று சாதனை புரிந்து அதற்கான பரிசைப் பெறுவது போல் மனச்சித்திரமாக கற்பனை செய்து பார்க்க வேண்டும். அதாவது தேர்வில் 1190 / 1200 எடுத்து மாநிலத்திலேயே முதல் மாணவி / மாணவனாக வந்தது போன்றும் மேடையேறி மாவட்ட ஆட்சியரிடம் பரிசு வாங்குவது போலவும், முதலமைச்சரிடம் தங்கப் பதக்கம் வாங்குவது போலவும் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாமிடம் பரிசு பெற்று அவரிடம் ஒரு நிமிடம் பேசுவது போலவும் கற்பனை செய்து மனச்சித்திரம் பார்த்தால் நாம் வெற்றியை சுலபமாய் பெற இயலும். ஒரு சிறிய அட்டையில் (3" ஒ 5" அளவுள்ள அட்டையில்) நம் குறிக்கோளை எழுதி சட்டைப் பையில் வைத்துக் கொண்டு அடிக்கடி எடுத்துப் பார்த்தால் அது நம் மனம் விரைவாக செயல்படவும் வெற்றி பெறவும் மிகவும் உதவும். நம் வாழ்வில் இதுவரை நாம் அடைந்த வெற்றிகளை நினைத்ததாகவே இருக்கும். பாரதியார் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு பல ஆண்டுகள் முன்னதாகவே "ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்" என்று பாடினார். இவ்வாறு நினைத்து அதையே சதா சர்வ காலமும் மக்களைப் பேசவைத்து, நினைக்க வைத்ததனால்தான் நாம் ஆங்கிலேயர்களிடமிருந்து சுதந்திரம் பெற்றோம் என்பதை நாமெல்லோரும் அறிவோம்.*

*தொடரும்...*

# "ஆசான்"

**மதுரை முரளி**

சென்றமாத தொடர்ச்சி...

"போன வாரம் வரை, நானும் மறந்து தான் இருந்தேன். திடீரென நல்ல ஞானோதயம் இந்த கவிதையால் எனக்கு கிடைச்சது. ஓ, சாரி நாம கிளம்பலாம். பள்ளிக்கூடம் அடைக்கிற நேரம் தாண்டிடுச்சே" வருத்தப்பட்டான் பிரகாஷ்.

"என்னை பொறுத்தவரை.. எனக்கு இந்த பள்ளிக்கூடம் தான் எல்லாம். நான் தனிமரம். வீட்டுக்கு போய் என்ன பண்ண போறேன்?"

"அப்போ உங்களுக்கு திருமணம்?"

"அப்பா, அம்மா சொந்த ஊர்ல.. தேனியில் இருக்காங்க.

பொண்ணு தேடிக்கிட்டு இருக்காங்க. நான் வாரம் ஒரு முறை கண்டிப்பா அவங்கள பார்க்கப்போவேன். நீங்க தாராளமா உங்க நினைவுகளை பகிரலாம். இரவு என் கூட தங்கலாம். மெயின்ரோடுல புரோட்டா கடை இருக்கு "சொல்லிவிட்டு அகிலன் சிரிக்க,

தானும் கலந்து கொண்டான் சிரிப்பில் பிரகாஷ்.

"அகிலன் சார், சந்திச்ச கொஞ்ச நேரத்திலேயே நெருங்கி பழகிட்டீங்க. "பிரகாஷ் சிநேகமாய் கைநீட்ட,

நட்போடு கைப்பற்றி குலுக்கினான் அகிலன்.

"ரொம்ப போரடிக்கிறேனோ?"

"சே! சே! ரொம்ப மகிழ்ச்சியாவும், வித்தியாசமான உணர்வாவும் இருக்கு எனக்கு" ஆழமாய் அகிலன் பார்க்க,

தொடர்ந்தான் பிரகாஷ்.

"நான் படித்தபோது திரு.சுவாமிநாதன்

*தலைமையாசிரியர். இ..இல்லை. தலைமை ஓராசிரியர் பள்ளி இது. சகலமும் அவரே. ஓ... மறக்க முடியாத வகுப்பு நினைவுகள். “இடைவெளிவிட்டு,*

*மீண்டும்...*

*“அப்ப.. கல்வி ஆழமா.. நல்ல புரிதலுடன் இருந்தது. திடீரென முந்தின நாள் பாடத்திலிருந்து வினா எழுப்புவார். பதில் தெரியலைன்னா.. முதல்ல எழுந்து நிற்கணும். வரிசையா.. கேள்வி ஒரு சுற்று வரும். யாரு பதில் சொல்கிறார்களோ, அவங்க பதில் சொல்ல முடியாதவங்க தலையில் குட்டணும்.*

*“ஓ.. ஆஹா” சிரித்தான் அகிலன்.*

*“ஆமா நிசமா. நான் பெருமைக்கு சொல்லலை. நான் நிறைய தடவை நிறைய பேரை குட்டியிருக்கேன்”.*

*“ரொம்ப புத்திசாலி சார். நீங்க ஒரு தடவை கூட குட்டு வாங்கலையா?” ஆர்வமாய் அகிலன்.*

*“அது எப்படி சார்? நானும் சில தடவை குட்டு வாங்கியிருக்கிறேன். தப்பு செய்யாதவன் யாருமே இல்லையே... இங்கே. அனுபவம் தானே பாடம் நம்ம வாழ்க்கையில.”*

*“அசத்துறீங்க சார். அருமையா பேசுறீங்க.” அகிலன் சிலாகிக்க,*

*“இன்னொரு விஷயம். சில பேரு எனக்கு நெருங்கிய நண்பரானயிருப்பாங்க. அவங்க தலையில மட்டும் லேசாக குட்டுவேன்”. கூறிய பிரகாஷ்,*

*“ஹா ஹா ஹா” என வாய்விட்டுச் சிரித்தான்.. பல வருடங்களுக்குப்பின்*

*“ஆமா, நீங்க சொன்ன சுவாமிநாதன் சாரை பார்த்திருக்கீங்களா?” அகிலன் வினவ.*

*“அதுக்குதானே முக்கியமாக வந்திருக்கேன். அவர்தான் எனக்கு கல்விக்கண் திறந்த கடவுள். ஆசான்...*

தொடரும்....

# வேதபாரதி - திருநெல்வேலி மஹாருத்ரம் - கோடி காயத்ரீ ஹோமமம் - 2023

சென்றமாத தொடர்ச்சி...

ஸ்ரீ வேதபாரதி அமைப்பினரின் திட்டமிட்டபடி 23.06.2023 அன்று ஸ்ரீ மஹாஸங்கல்பம், கணபதி ஹோமமம், கோ பூஜை முதலியவை நடைபெற்ற பின் ஸ்ரீ மஹாருத்ர பாராயணம் தொடங்கப்பட்டு இரண்டுநாள் நடைபெற்றது. பாராயணத்தில் 65 அங்கத்தினர்கள் கலந்துகொண்டனர். அன்றே ஸ்ரீ காந்திமதி அம்மன் சன்னதியில் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம பாராயணம் மூன்று ஆவர்த்திகள் மிக விமரிசையாக நடைபெற்றது. இறுதி நாளான 25.06.2023 அன்று காலை 6.00 மணியில் இருந்தே ஹோமத்திற்கான ஏற்பாடுகள் துவங்கி காலை 7.45 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது. திருச்சி எல்.ஐ.சி. ஸ்ரீ நந்தகுமார் அவர்கள் காயத்ரீ மந்திரம் கூற அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் காயத்ரீ மந்திரத்தைத் திருப்பிக் கூறி மிகவும் சிரத்தையுடன் ஹோமம் செய்தனர். கும்பகோணம் ஸ்ரீ ராமகிருஷ்ணன் அவர்கள் மிகச்சிறந்த முறையில் ஹோமம் நடைபெறுவதை மேற்பார்வை செய்து அனைவரையும் சிறப்பாக வழிநடத்தினார்கள். மொத்தம் 5 ஹோம குண்டங்கள் நிறுவப்பட்டு ஒரு ஹோம குண்டத்திற்கு 8 நபர்கள் வீதம் மொத்தம் 40 அங்கத்தினர்கள் ஹோமத்தில் பங்குகொண்டனர். அவர்களுள் சமித்து ஹோமம் செய்ய ஒவ்வொரு பிரும்மச்சாரி குழந்தையும், எள் ஹோமம் செய்ய மூத்த அங்கத்தினரும் தெரிவு செய்யப்பட்டு அமர்விக்கப்பட்டனர். பிரதானமான ஆஜ்யம் ஹோமம் செய்ய சிகை வைத்த அங்கத்தினர் தெரிவு செய்யப்பட்டு அமர்விக்கப்பட்டனர். ஹோமம்

*11.30 மணியளவில் இனிதே நிறைவு பெற்றது.*

*காயத்ரீ ஹோமம் திருக்கோவிலின் வெளிப்பிரகாரத்தில் நடைபெறும்பொழுதே திருக்கோவிலின் உள்ளே கலசங்கள் ஸ்தாபிக்கப்பட்டு ருத்ர பாராயணமும் ருத்ர ஹோமமும் நமது மகாகுரு ப்ரும்மஸ்ரீ கைலாஸ கனபாடிகள் அவர்களால் செய்விக்கப்பட்டது.*

*அன்று மாலை 4.30 மணியளவில் நம் காயத்ரீ ஜெபம் செய்ய முன்வந்த அங்கத்தினர்களுக்கு இடம் கொடுத்து உதவிய ஆஸ்திக சமாஜ நிர்வாகிகளுக்கும், ஹோமத்தில் கலந்துகொண்ட மற்றும் காயத்ரீ ஜபம் செய்த அனைத்து அங்கத்தினர்களுக்கும் மற்றும் மிகவும் நேர்த்தியாக அனைவருக்கும் பசியாற உணவு சமைத்துக் கொடுத்த சேரன்மாதேவி அரியநாயகிபுரம் ஸ்ரீ அசோக் குழுவினருக்கும் சென்னை வேதபாரதி ஸ்ரீ வெங்கட்ராமன் அவர்கள் உரிய மரியாதைகள் செய்தும், பிரசாதம் வழங்கியும் தங்களது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.*

*ஸ்ரீ சிதம்பரம் அய்யா அவர்கள் தலைமையில் உள்ள ஸ்ரீ அண்ணாமலையார் திருப்பணிக்குழுவினர் அனைவரையும் மண்டபத்தில் ஒன்று கூட்டி அவர்கள் அனைவருக்கும் உரிய மரியாதை செய்யப்பட்டது. இத்தருணத்தில் சிவத்திரு சிதம்பரம் அய்யா அவர்களின் வலதுகரமாகத் திகழ்ந்த அன்னாரின் நினைவு, சொல் மற்றும் அவரின் மறுஉருவமாகச் (மனோ - வாக் - காயம்) செயல் புரியும் சிவத்திரு ஐயப்பன் அய்யா அவர்களின் சேவை மிகவும் மகத்தானது. அவரது தொண்டினை இங்கு குறிப்பிடத்தவறினால் இந்த நிகழ்ச்சியோ அல்லது நன்றி கூறுவது என்பதோ நிறைவு பெறாது*

என்பது முக்காலும் உண்மை. ஒவ்வொரு விஷயத்தையும் அன்னார் மேற்பார்வை செய்து இந்த நிகழ்ச்சிக்கு என்னென்ன தேவையோ அவை அனைத்தையும் அந்தந்தத் தருணத்தில் கிடைக்கச் செய்தமைக்கு எத்தனை முறை நன்றி கூறினாலும் போதுமானதாக இருக்காது. இது மட்டுமமின்றி அன்னாரது கண்ணசைவைப் பார்த்து அனைத்துக் காரியங்களையும் செவ்வனே ஆற்றி முடித்த அவரது உதவியாளர்களின் சேவையும் மிகவும் குறிப்பிடத்தக்கது. அவர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் நிறைவுற வாழ்ந்து தங்களை இது போன்ற சமுதாய இறைப்பணியில் ஈடுபடுத்திக் கொள்ள இறைவன் திருவருள் புரிவானாக என்று அனைவரும் வேண்டிக்கொண்டனர். இந்த நிகழ்ச்சியின் பலனை இறைவனுக்கு அர்ப்பணம் செய்தபின் விழா இனிதே நிறைவு பெற்றது.

சுபம்.

## ஊரப்பாக்கம் வேதபாரதி - காயத்ரீ ஜபம்/ஆவணி அவிட்டம் 2023

கடந்த சில மாதங்களாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை ஸகஸ்ர காயத்ரீ ஜபம் நடைபெற்று வருகிறது. 31.08.2023 காயத்ரீ ஜபம் முன்னிட்டு காயத்ரீ ஜபம் மற்றும் காயத்ரீ ஹோமமம் சிறப்பாக நடைபெற்று காயத்ரீ மாதாவிற்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பிரம்மசாரிகள் பலரும் இதில் கலந்து கொண்டு ஹோமமம் செய்தனர்.


உ
திருமண பொருத்தம் இலவசம்
(அனைத்து சமூகத்தினருக்கும்)
வாட்ஸ்அப் மூலம் மட்டும்
பையன்கள் பெண்கள் ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில் அனுப்புதல் வேண்டும்.
Brahmin Kalyanam.com
An Auspicious Beginning ...
EXCLUSIVE PORTAL FOR BRAHMINS
BK MATRIMONY
An Auspicious Beginning ...
தேதியூர். V.J. ராமன்
ஆத்மார்த்த ஜோதிடர்
9003195599
9445230940

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 33

**“தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்.” (குறள் 67, அதிகாரம் 7)**

“தம் குழந்தைகளை வளர்ப்பது பெற்றோர்கள் தான். அதிலும் தந்தையின் கடமை பள்ளிக்கு அனுப்புவது. அதற்குரியச் செலவுகளை ஏற்பதற்காக கடுமையாக உழைப்பது என்று ஓயாது செயல்பட வேண்டும்.

இவற்றைமீறி ஒரு தந்தை தன் மகனுக்குச் செய்ய வேண்டிய மிகச் சிறப்பான செயல் என்பது தன் மகன் கற்றவர் சபையில் முதல் வரிசையில் சிறப்பு மிக்கவனாக விளங்க வேண்டும் என்றும் கல்வி, கேள்வி அறிவாற்றலை அவனிடம் அதிகரிக்க வேண்டும்” என்கிறார் திருவள்ளுவர்.

**இதோ சில டிப்ஸ் :**

- Listen More. Lecture Less.
  அதிகமாக காது கொடுத்துக் கேளுங்கள். பேசுவதைக் குறையுங்கள்.
- Question More. Nag Less.
  நிறையக் கேள்விகளை கேளுங்கள். பேசுவதைக் குறையுங்கள்.
- Praise More. Nitpick Less.
  நிறையப் புகழுங்கள். சின்னச்சின்ன குறைகளை சுட்டிக்காட்டி கொண்டேயிருக்காதீர்கள்.
- Seek Suggestion More. Give Advice Less.
  நிறைய அவர்களிடமிருந்து கேட்டு தெரிந்து

கொள்ளுங்கள், குறைவான அறிவுரைகளைக் கூறுங்கள்.

- ❖ Discipline is not a punishment. But it is a process.
  ஒழுக்கத்தை கற்றுக் கொடுப்பது என்பது தண்டனையல்ல அது ஒரு வாழ்வியல் திறன்.
- ❖ Positive attitude in a child builds healthy self-esteem.
  நேர்மறையான முறையில் குழந்தையை அணுகுவது ஒரு குழந்தையின் சுய மதிப்பையும், சுய சார்பையும் அதிகரிக்கும்.
- ❖ Parents and children are partners in discipline.
  பெற்றோர்களும், குழந்தைகளும் ஒழுக்கத்தில் பங்குதாரர்கள்.
- ❖ If a child lives with criticism, he learns to condemn.
  ஒரு குழந்தையின் குறைகளைச் சுட்டிக்காட்டி கொண்டேயிருந்தால், அக்குழந்தை தவறுகளை மட்டுமே காணும் குணத்தைப் பெறும்.
- ❖ If a child lives with hostility, he learns to keep on fighting for everything.
  ஒரு குழந்தையிடம் சதா கோபத்தைக் காட்டிக் கொண்டேயிருந்தால், அக்குழந்தை அனைத்திற்கும் அனைவருடனும் சண்டைக்கு செல்லும் குணம் அதிகமாகும்.
- ❖ If a child lives with shame, he learns to be guilty.
  அவமானப்படுத்தப்படும் ஒரு குழந்தை சதா குற்றவுணர்வுடன் வாழும்.
- ❖ If a child lives with ridicule, he learns to be shy.
  சதா அவமானப்படுத்தப்படும் குழந்தை வெட்கப்பட்டு ஒதுங்கியிருக்கும்.

- If a child lives with Tolerance, he learns to have patience.

  அனைத்தையும் பொறுமையுடன் ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை அளிக்கப்படும் குழந்தைக்கு பொறுமை எப்பொழுதும் இருக்கும்.

- If a child lives with encouragement, he learns to live with confidence.

  சதா ஊக்கப்படுத்தப்படும் ஒரு குழந்தைக்கு தன்னம்பிக்கைக் கூடும்.

- If a child lives with Praise, he learns to appreciate.

  புகழப்படும் ஒரு குழந்தை மற்றவர்களை அவர்கள் செயலுக்கு ஏற்ப புகழும்.

- If a child lives with fairness, he learns justice.

  மிகச் சரியான பார்வையை இவ்வுலகிற்கு அளிக்க கற்றுக் கொடுக்கப்படும் குழந்தை நியாய உணர்வுடன் இருக்கும்.

பெற்றோர்களே, குழந்தை வளர்ப்பில் நீங்கள் எதை அளிக்கின்றீர்களோ, அதை பன்மடங்கு அதிகமாக பிற்காலத்தில் நீங்களும், இச்சமுதாயமும் பெறுவீர்கள் என்பதை உணர்ந்து செயல்படுங்கள்.

தொடரும்...


உ

ஸ்ரீ குருப்யோ நம:

**வேதபாரதி**

**கோடிகாயத்ரீ ஜப யக்ஞம் கோவை**

நாள் : 28.10.2023 இடம் : ஸ்ரீ ஐய்யப்பன் பூஜா சங்கம் ராம்நகர், கோவை.

குடும்பத்துடன் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

மேலும் தொடர்புக்கு : **9443495950 / 98402 01625**

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

# சாதனைப் பறவைகள்

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்

## தாடகை என்றொரு சிவபக்தை



இந்த விவரம் ஊர் மக்களுக்கும் தெரியப்படுத்தப் பட்டது. தாடகை எனும் அந்த சிவபக்தையை தரிசிக்க அரசன் ஆவல் கொண்டான். அர்ச்சகர் அந்த எளிய பெண்மணியை அழைத்துவந்தார். அரசன் உள்பட அனைத்து மக்களும் அவளின் தாள்பணிந்து வணங்கி நின்றனர். தாடகையின் சிவபக்தியின் பெருமை ஊர் முழுவதும் பரவியது. ஆனால் சிவபெருமானை நிமிர்த்தக் கூடிய அந்த சிவபக்தர் யாராக இருக்கும்? அவர் எங்கிருக்கிறார்? எப்போது இந்த ஸ்தலத்துக்கு வந்து, தன் சிவபக்தியின் பலத்தினால் தாடகேஸ்வரரை நிமிர்ந்து நிற்கச் செய்யும் அந்த அற்புத நிகழ்வு நடக்கப் போகிறது? என்று அரசன் உள்பட அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். நாமும் காத்திருக்கும் வேளையில் இத்திருத்தலம் பற்றி மேலும் ஒரு சிறப்பைத் தெரிந்து கொள்வோம்.

இத்திருத்தலமே முன்பொருகாலத்தில் "தாடகையீஸ்வரம்" என்றுதான் பெயர் பெற்றிருந்தது. இங்கிருக்கும் பல தீர்த்தங்களில் பிரதான தீர்த்தம் தாடகை தீர்த்தம். அடுத்து ப்ரும்ம தீர்த்தம். பிரம்மதேவர், சிவபெருமானின் அடி முடி கண்டுவிட்டதற்கு, தாழம்பூவை பொய் சாட்சி கூறவைத்து பொய்யுரைத்ததனால் கோபமுற்ற ஈசன்,

பிரம்மதேவனுக்குப் பூலோகத்தில் தனிக் கோவில்கள் இல்லாமல் போகட்டும் என்றும், தாழம்பூ சிவ பூஜைக்கு அருகதை இல்லாமல் போகட்டும் என்றும் சபித்தார் என்று நாம் அறிவோம். பிரம்மதேவர் தன் தவறைஉணர்ந்து ஈசனிடம் சாப விமோசனம் வேண்டினார். "பொய் சொன்ன பெரும் சாபம் தொலைய வேண்டும் என்றால் திருப்பனந்தாள் சென்று, அத்தல தீர்த்தத்தில் நீராடித் தன்னை வழிபட வேண்டும்'' என்று கூறினார் சிவன். பிரம்மாவும் அவ்வாறேசெய்து, சிவனை வழிபட்டு சாபவிமோசனம் பெற்றார். இதனால் அகமகிழ்ந்த பிரம்மதேவர், இத்தல அருணஜடேஸ்வரருக்கு, சித்திரை மாதத்தில் பெருவிழா நடத்தி இன்புற்றார். இன்றும் ஒவ்வொரு வருடமும் இத்தலத்தில் நடைபெறும் சித்திரைப் பெருவிழாவை பிரம்ம தேவரே முன்னின்று நடத்துவதாக ஐதீகமிருக்கிறது. பிரம்மதேவர் நீராடி சாபவிமோசனம் பெற்றபொய்கை தீர்த்தம், தற்போது "பிரம்ம தீர்த்தம்'' என்று அழைக்கப்படுகிறது. இப்படி மேலும் பல விசேஷங்கள் உள்ள இத்திருத்தலத்தின் நாயகரான அருண ஜடேஸ்வர லிங்கத்தின் சாய்ந்த தலைப் பகுதியை நிமிர்த்த வல்ல அந்த பக்தரின் வருகைக்காக நாம் காத்திருப்போம் அடுத்த இதழ் வரையில்...

தாடகை எனும் சிவபக்தையின் மகிமை தொடரும்.

**நன்றி! நன்றி! நன்றி!**

இந்த மாத புத்தக அச்சுக்கட்டணம் முழுமையாக ஏற்றுக்கொண்ட **ஜனகல்யாண் மாடம்பாக்கம் நிர்வாகிகள் ஸ்ரீ சுந்தரராமன், ஸ்ரீ சாய்ராம், ராம் ராம் சகோதரர்களை** வேதபாரதி புத்தக குழுவின் சார்பாக மனதார வாழ்த்துகிறோம்.

## இராமாயணம் தரும் படிப்பினை

*சென்றமாத தொடர்ச்சி...*

மேலும் இராமர் இலக்குவனிடம், பரதன் வந்தால் உனக்கு இராஜ்யத்தை கொடு என்று நான் சொன்னால் உடன் கொடுத்துவிடுவான். இதைக்கேட்ட இலக்குவன் வெட்கித் தலைகுனிந்தான். அப்போது சீதை இலக்குவனிடம் எப்பொழுதும் மற்றவர்களின் நல்ல குணத்தைப் பார்க்க வேண்டும், நம்மிடம் உள்ள தீய குணத்தைப் பார்க்க வேண்டும். அப்போது தான் நாம் மன நிறைவுடன், அமைதியாக, உத்தம மனிதராக வாழமுடியும் என்றாள். பலருடன் சேர்ந்து, பழகி வன சமூகத்தில் வாழும் நமக்கு இந்த குணம் கண்டிப்பாக இருக்க வேண்டும். இதில் நம்மையறியாமலேயே “விட்டுக்கொடுத்தல்” என்ற சுபாவம் வரும்.

அப்போது பரதன் தனது படைகளைத் தூரத்தில் நிறுத்திவிட்டு தம்பி சத்ருக்னன் மந்திரி சுமத்திரருடன் கால் நடையாக இராமர் இருக்கும் குடில் நோக்கி வந்தான்.

தங்க அரியணையில் அமர வேண்டியவன் புல் தரையில் அமர்ந்திருப்பதைக் கண்ட பரதன் துக்கம் மேலிட்டு பேசமுடியாமல் அண்ணா என்று கதறியபடி இராமரின் காலடியில் வீழ்ந்தான். பிறகு இராமர் பரதனை தனது மடியினில் அமர வைத்து, அவனது ஜடாமுடி வேடத்தைக் கண்ட இராமர் பதைபதைத்து தந்தையைத் தனியாக விட்டுவிட்டு நீ ஏன் வனத்திற்கு வந்தாய் என்று கேட்டார். பிறகு பரதனால் எதுவும் பேசமுடியவில்லை. ஸ்ரீராமரே தன்னை சுதாரித்துக்கொண்டு ராஜ க்ஷேம நலன்கள் பற்றிக் கேட்டார். பரதனிடம் இராமர் கேள்விகள் வாயிலாகவே இராஜதர்மத்தை உபதேசிக்கிறார். அதற்கு பரதன் மூத்தவன் நீ இருக்க எனக்கு எதற்கு

*ராஜ்யம், அதன் பரிபாலனம்? எனது தர்மம் உனக்கு அடிபணிந்து சேவை செய்வது, அதனால் என்னுடன் அயோத்திக்கு வந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள் என்றான்.*

*நமது தந்தையோ அவர் செய்ய வேண்டிய வேள்விகள் கடமைகளை முடித்து விட்டு உனது பிரிவைத் தாங்க முடியாமல் சுவர்க்கம் சென்றுவிட்டார். தந்தை இறந்த செய்தியைக் கேட்ட இராமன் மூர்ச்சையாகி கீழே விழுந்தான். சீதை, இலக்குவன் அழுதனர். நான்கு சகோதரர்களும் தந்தையின் பிரிவு தாளாது ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டு கதறி அழுதனர். பரதன் இராமனிடம், நீ மூத்த பையன், தந்தைக்கு பிரியமானவனும் கூட அதனால் அவருக்கு இறுதிக் காரியங்கள் நீ செய்தால் தான் அவரது ஆத்மா சாந்தியடையும். பெற்றோர்களுக்கு பிரியமான குழந்தைகள் செய்யும் சமஸ்காரத்திற்கு சக்தி அதிகம். கடைசியில் நமது தந்தை உன் ஞாபகமாகவே இறந்திருக்கிறார். தசரதருக்கு நான்கு மகன்கள் இருந்தும் ஒருவர் கூட அவர் இறக்கும் சமயம் அருகில் இல்லை. இதுதான் விதி என்று கூறினான் பரதன். பிறகு வசிஷ்டர் போன்ற பெரியவர்கள் சகோதரர்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.*

தொடரும்...

**- காந்தாமணி நாராயணன்**

**நன்றி! நன்றி! நன்றி!**

கடந்த 9-ஆண்டுகளாக தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் நல்உள்ளங்களுக்கு வேதபாரதி குழுவின் மனமார்ந்த நன்றிகள்.



# ஸ்ரீ சங்கரா இலவச முதியோர் இல்லம்

ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை (Regd.)
பண்டித மேடு, திருப்போரூர் அருகில்

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன், ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை ஓர் இலவச முதியோர் இல்லத்தை திருப்போரூர் அருகில் உள்ள பண்டித மேடு கிராமத்தில் நிர்வகித்து வருகிறது. அங்கு 50 முதியவர்கள் அமைதியாக வாழ்ந்து வருகின்றனர்; இந்த நிர்வாகம் உங்கள் ஆதரவை நாடுகிறது:

திருமண நாள், பிறந்த நாள், நினைவு நாள் போன்றவற்றில் ஒன்றை தேர்ந்தெடுத்து ரூ.3000/- அளித்தால் முதியோர் இல்லத்தின் ஒரு நாளின் செலவுக்கு ஆகும்.

தங்களுக்கு விருப்பமான தொகையை கீழ்க்கண்ட விலாசத்திற்கு “ஹிந்து சேவா சமாஜம் டிரஸ்ட்” **(HINDU SEVA SAMAJAM TRUST)** என்ற பெயரில் காசோலை அல்லது கணினி வழி வங்கி கணக்கு மூலமாக நேரடியாக அனுப்ப வங்கி கணக்கு எண்.: **914010003352646;** ஆக்ஸிஸ் பேங்க், துரைப்பாக்கம் கிளை, **IFS CODE : UTIB0001566** அனுப்பலாம். கணினி வழியாக அனுப்புவோர் அவசியம் பணம் அனுப்பிய விவரத்தை கீழ்காணும் எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். செய்யவும். இவ்வுதவி செய்பவர்களுக்கு 80G பிரிவின்படி வரிச்சலுகை உண்டு.

**M. இராமகிருஷ்ணன்,** அறங்காவலர்
71, முதல் பிரதான சாலை, காந்தி நகர்,
அடையாறு, சென்னை - 600 020.
Cell : 93810 45601 | Email : amarabharathy7@gmail.com

# தருவின் நிழலில்
# தேற்றா மரம் (Strychnos Potatorum)
## ஸ்டிரிக்னாஸ் பாட்டாடோரம்)

தேறாதவனையும் தேறவைக்கும் மரம் என இதன் மருத்துவ குணங்களினாலும் பயன்பாட்டினாலும் அழைக்கப்படுகிறது.

இலையுதிரும் தன்மையுள்ள சிறுவகையைச் சார்ந்த இம்மரம், மலை காடுகளிலும் சமவெளிப் பகுதிகளிலும் வளருபவை. என்றாலும், மலைப்பகுதிகளில் அதிகம் காணப்படுகின்றன.

தோற்றா மரம், தேத்தாங்கொட்டை, தேறு, இல்லம் என மற்றபெயர்களாலும் அழைக்கப்படுகிறது. தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலும் இல்லம் என அழைக்கப்படுகிறது என்றாலும், தேத்தா என பழமையான தமிழ் இலக்கியமான தொல்காப்பியமும், பிங்கலநிகண்டு என்றநூலும் உரைக்கிறது.

கார்காலத்தில் பூக்கும் இம்மரங்கள், முல்லை நிலத்தில் அதிகம் செழிப்புமிக்கதாக வளர்ந்தது என சங்ககால நூல்கள் கூறுகின்றன. சங்ககால மகளிர் இம்மர பூக்களை சூடி மகிழ்ந்தனர் எனவும் கூறுகின்றன. சங்ககால இலக்கியத்திலும் ஒன்றான அகநானூறு,

"முல்லை இல்லமொரு மலர் கார் தொடங்கின்றே
இல்லம் முல்லையோடு மலரும்" - என்கிறது.

நற்றிணை, கலித்தொகை போன்றசங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள பழமையான மரமான தேற்றாவின் இலைகள் பளபளப்புத் தழையமைப்புள்ள மரமாதலால் நல்ல நிழல்தரும் மரமாகும்.

இம்மரத்தின் பழம் நாவல் மரத்தின் பழத்தை ஒட்டியிருக்கும், இதன் பழமும், கொட்டையும் வலி, கபம் ஆகியவற்றிற்கு சிறந்த மருந்தாக பயன்படுகிறது. தேற்றா மரம் சீதபேதி, வயிற்றுப்போக்கு, காயம், புண்,

வட்சூடு, வெட்டை ஆகிய நோய்களுக்கும் சிறந்த மருந்தாக பயன்படுகிறது. இதன் காரணமாக இம்மரத்தை "மருத்துவ மரம்" என சித்த வைத்தியத்தின் சிறப்பான புத்தகங்களில் ஒன்றான "பதார்த்த குண பாடம்" எனும் நூல் புகழ்ந்துரைக்கிறது.

தேற்றா கொட்டையில் செய்யப்படும் லேகியம், சத்துகள் குறைந்து தாதுக்களற்று மெலிந்த உடல் நிலைக் கொண்டுள்ளோரை தேற்றி வளமாக்குகிறது. தேற்றா மரம் என அழைக்கப்படுவதற்கு இது முக்கிய காரணமாகும்.

தேற்றா கொட்டை சிறந்த குடிநீர் சுத்திகரிப்பானாகப் பயன்படுகிறது. குளம், ஊரணி போன்றநீர் நிலைகளிலிருந்து எடுக்கப்படும் தண்ணீர் சேறு கலந்து குழம்பலாக இருக்கும். கலங்கிய நிலையிலுள்ள இந்த நீரை நேரிடையாக குடிக்க பயன்படுத்த இயலாத நிலையில், தண்ணீர் பானையின் உட்புறத்தில் தேத்தாங்கொட்டையை தேய்த்து பிறகு நீரை நிரப்பி வைத்து சிலமணி நேரத்திற்கு பிறகு பார்த்தால், தண்ணீர் மிகத் தெளிவாக வாசமின்றி குடிப்பதற்கு ஏதுவாக இருக்கும். இன்றைக்கும் இராமநாதபுரம் போன்ற வறட்சி மிகுந்த தென் மாவட்டங்களில் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

பண்டைய தமிழர்கள் கப்பல்களில் தொலைதூரப் பயணங்கள் செய்யும்போது குடிநீரையும் மற்ற பயன்பாட்டிற்கான நீரையும் தெளிவாக்கி சுத்தம் செய்வதற்கு தேத்தாங் கொட்டையை பயன்படுத்தி இருக்கிறார்கள்.

**ஆதிரையன்.**

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

## குத்தாலம் ஆத்திசூடி கொன்றைவேந்தன் 2023

திருத்துருத்தி எனும் பழம்பெயருடைய குத்தாலம் உக்தவேதீஸ்வரர் ஆலயமானது சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவராலும் தேவாரப் பாடல் பெற்றதலங்களில் காவிரி தென்கரைத்தலங்களில் அமைந்துள்ள குத்தாலம் எனும் ஊர் ஒரு சிவத்தலமாகும்.

பெருமைவாய்ந்த தலம், தீர்த்தம், மூர்த்தி என சிறப்பினைக் கொண்ட தலத்திலே கடந்த ஞாயிறு 27.08.2023 அன்று ராஜ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற குழந்தைகளுக்கான ஔவை விழா வேதபாரதி, சுபிக்ஷா ஹிந்தி வித்யாலயா, மங்கள சக்தி சமிதி இணைந்து வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. சுமார் 200க்கும் மேற்பட்ட குழந்தைகள் தங்கள் பெற்றோருடன் காலை 9.00 மணிக்கே வந்திருந்து நிகழ்வினை சிறப்பித்தார்கள்.

ஆசிரிய பெருமக்களும், தன்னார்வலர்களும் இணைந்து அந்த குழந்தைகளின் ஆத்திசூடி மற்றும் கொன்றைவேந்தன் பாடல்களை கேட்டு சிறந்தமுறையில் சொல்லிய குழந்தைகளை முதல் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களாக பார்த்து பரிசளிக்க பரிந்துரைத்தனர்.

குழந்தைகளின் மன வளர்ச்சி மற்றும் உடல் வளர்ச்சிகளுக்கு காரணமாக இருக்கும் பெற்றோர்களுக்கும் அங்கே பயிற்சிகளை வேதபாரதி அமைப்பின் பயிற்சியாளர் திரு தாம்பரம் வெங்கடேசன் அவர்கள் பெற்றோர்களின் மன அழுத்தத்தினை விலக்கி பிள்ளைகளிடம் சகஜமாக பழகவும், அவர்களிடத்தில் எதை எதிர்பார்க்க வேண்டும் என்பதை சில விளையாட்டின் மூலமாகவும் செய்முறைபயிற்சி மூலமாகவும் காண்பித்திட பெற்றோர்களின் மனமாற்றங்களை விழா முடிவில் நாங்கள் கண்டு மகிழ்ந்தோம்.

பரிசளிப்பு விழா : நேரக்கட்டுபாடுடன் நிகழ்ந்த விழாவிற்கு ராஜ் மெட்ரிக் பள்ளியின் தாளாளர் திரு.பாண்டியன் அவர்கள் தலைமையேற்க, சிட்டி யூனியன்

வங்கியின் முன்னாள் பொது மேலாளர் திரு.ராமசாமி, மயிலாடுதுறைசங்கரா மேல்நிலைப்பள்ளியின் செயலர் திரு.வெங்கட்ராமன் தாயகம் அமைப்பின் நிறுவனர் சித்ரா முத்துக்குமார், சமூக ஆர்வலர் திரு.பட்டாபிராமன், சுபிக்ஷா ஹிந்தி வித்யாலயா அமைப்பாளர் திருமதி.ஜானகி அவர்களுடன் நானும் கலந்து கொண்டு வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகளை வழங்கி குழந்தைகளை வாழ்த்தி கௌரவித்தோம். போட்டியில் கலந்துகொண்ட அத்துணை குழந்தைகளுக்கும் ஆறுதல் பரிசினையளித்து அவர்களையும் மகிழ்வித்தது வேதபாரதி அமைப்பின் சிறப்பாகும்.

"சேவை என்பது தேவை உள்ள வரை என்பார்கள்" ஆனால் சேவை என்பது சமூகத்தில் சிறு தாக்கத்தையாவது ஏற்படுத்திட வேண்டும், என்கிற நல்ல நோக்கத்தோடு எவ்வித எதிர்பார்ப்புமின்றி செய்யும் செயல்கள் அனைத்தும் மகத்தான சேவையாகிவிடுகின்றன. அந்த வகையிலே குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் நல்லவற்றை நினைத்து நல்லவற்றை சிந்தித்து அவர்களுக்கு நல்லதொரு தரமான, அறமான வாழ்க்கை அமைய வேண்டும் என்ற நோக்கத்தில் நீதிநெறி பாடமான கொன்றைவேந்தன் மற்றும் ஆத்திசூடிகளின் பாடல்களை குழந்தைகளிடம் கொண்டு சேர்த்த இந்த அமைப்பானது மிகவும் பாராட்டுதலுக்கு உரியது. பொது சேவைகளை தொடர்ந்து செய்து வரும் வேதபாரதி அமைப்பிற்கும் நிகழ்ச்சிகளை தேநீர் மற்றும் மதிய உணவுடன் ஏற்பாடு செய்திருந்த திரு.ஜானகி அம்மா அவர்களுக்கும் அவர்களுடன் இணைந்து பணியாற்றிய மங்கள சக்தி சமிதி மற்றும் சுபிக்ஷா ஹிந்தி வித்யாலயா ஆசிரிய பெருமக்களுக்கும் தன்னார்வலர்களுக்கும் மற்றும் கலந்து கொண்டு சிறப்பித்த அத்துணை நல்ல உள்ளங்களையும் பாராட்டுவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

**பா. அய்யாசாமி,** *எழுத்தாளர், மயிலாடுதுறை.*
*9786445263*

# அட்ட வீரட்டத் தலங்கள்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

## திருக்கோவிலூர் வீரட்டம்

சென்றமாத தொடர்ச்சி...

தக்ஷன் தன் ஆணவத்தால், வரம் தந்த சிவபிரானை நீக்கி ஒரு யாகம் செய்தான். யாகம் பார்க்க வந்த உமையை இகழ்ந்தான். உமை, ஆண்டவரிடம் முறையிடச் சிவன் கோபத்தினின்று வீரபத்திரரும், காளியும் தோன்றி யாகத்தை அழித்து, கலந்து கொண்ட தேவர்களைத் தண்டித்து, தக்ஷன் தலையை வெட்டி யாக குண்டத்தில் இட்டார். தக்ஷனின் மனைவியின் வேண்டுகோளுக்கு இணங்கி இறைவன் கருணை கொண்டு ஆட்டின் தலையைத் தக்ஷன் உடலில் பொருத்தி உயிருடன் எழுப்பினார். அவனும் தன் அறியாமையை உணர்ந்துவருந்தி, அத்தலையுடன் அவன் பாடியதே 'சமகம்' என்பதாகும்.

தக்ஷயாகம் நடந்த இடமே திருப்பறியலூர் ஆகும். இதற்குச் சான்றாக ஆலயத் தென்பாகத்தில் உள்ள கரிக்குளம் என்னும் தீர்த்தமாகும். இக்குளத்தைத் தோண்டத்தோண்ட கரியாகவே உள்ளது.

இது சிறிய ஊர்தான். மேற்கு நோக்கிய கோவில், ஆலயத்தில் நுழைந்து உள் மண்டபத்தில் இப்பகுதியில் தக்ஷ சம்ஹார மூர்த்தி உள்ளார். சூலம், தண்டு, வாள், மணி, கபாலம் முதலியன ஏந்தி ஆறு திருக்கரங்களுடன் காட்சி தருகிறார். கீழே செப்புத்தகட்டில் தக்ஷன் யாகம் செய்வது போலவும், பிரமன் இருப்பது போலவும் சிற்பம் உள்ளது. இவர்கீழே தக்ஷன் விழுந்து கிடப்பதைப் போல் சிற்பம் உள்ளது. இதைத் தகட்டால் மூடிவைத்துள்ளனர்.

கருவறையில் மூலவர் பெரிய திருமேனி சதுர ஆவுடையார், உற்சவர்களில் மயில் மீது ஒருகால் ஊன்றி

நிற்கும் முருகன் மிகச் சிறப்பானது.

அம்பாள் சந்நிதி தெற்குநோக்கி உள்ளது. அபய வரதத்துடன் நான்கு கைகளுடன் நின்ற திருக்கோலம். இளங்கொம்பனையாள் என்பது திருப்பெயர். சம்பந்தர் இத்தலத்தைப் பாடியுள்ளார்.

விளங்கொள் மலர்மேல் அயன் ஓதவண்ணன்
துளங்கும் மனத்தார் தொழத் தழலாய் நின்றான்
இளங் கொம்பனாளோடு இணைந்தும் பிணைந்தும்
விளங்கும் திருப்பறியல் வீரட்டத்தானே. (சம்பந்தர்.)

'இளமைச் செறியலூர் கடன்தல் திருவளையாராடும்
பறியலூர் வாழ் மெய்ப்பரமே' (வள்ளலார் அருட்பா)

இறைவன் : வீரட்டேஸ்வரர்; தக்ஷபுரீஸ்வரர்
இறைவி : இளங் கொம்பனையாள்
தலமரம் : வில்வம் & பலா
தீர்த்தம் : உத்திர வேதி தீர்த்தம்.

## 5. திருவிற்குடி வீரட்டம்

சோழநாட்டு தென்கரைத் தலங்களில் 74ஆவது தலம் இது. நாகூர், நாகப்பட்டினத்திலிருந்து காரைக்கால் வழியாகத் திருவாரூர் செல்லும் சாலையில் விற்குடி கூட்டு ரோட்டிலிருந்து 1 கி.மீ. தொலைவில் உள்ளது இத்தலம். புகைவண்டி நிலையம் உள்ளது. சவந்தரனை சம்ஹரித்த தலம் இது.

ஒரு சமயம் தேவேந்திரன் இறுமாப்புடன் கைலைவந்தபோது, பரமசிவன் பூதவடிவில் அவன்முன் தோன்றி, இந்திரன் பூதத்தின் மீது வச்சிராயுதத்தை எறிய பூதஉருக்கொண்ட சிவபிரான் உக்கிரமூர்த்தியாய் சீற்றம் காட்டிட இந்திரன் அவரது திருவடியைச் சரணடைந்தான்.

தொடரும்...

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, 32, Ground Floor, Raja Nagar, 1st Main Road, Neelangarai, Chennai - 600 115.
Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071
Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CUB கீ செயின் டெபிட் கார்டினை
பரிந்துரைத்து ஊக்க
வெகுமதியை பெறுங்கள்
₹150*
வரை
எவ்வாறு செயல்படுகிறது
STEP 1
நெட்பேங்கிங் மற்றும் மொபைல் பேங்கிங் வாயிலாக கீ செயின் டெபிட் கார்ட் வேண்டி விண்ணப்பிக்கவும்
STEP 2
விண்ணப்பிக்கும் போது பரிந்துரைத்தவரின் மொபைல் எண்ணை பதிவு செய்யவும்
STEP 3
கீ செயின் டெபிட் கார்டு டெலிவரி செய்யும் போது பரிந்துரைத்தவர் மற்றும் பரிந்துரைக்கபட்டவருக்கு ரூ.50
STEP 4
பரிந்துரைக்கபட்டவருக்கு மேலும் ரூ.50 (ஆக்டிவேஷன் செய்து முதல் பரிவர்த்தனை செய்த பின்)
CUB நெட் பேங்கிங், மொபைல் பேங்கிங் மற்றும் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கவும்
Scan QR Code
to Apply
*T&C Apply
RuPay
ON-THE-GO
If you are not an existing CUB Customer, Now you can open Savings & Current account instantly through VIDEO KYC
Simply give a missed call to
+91 88866 10805 (or) Scan the QR Code
CUB
TRUST AND EXCELLENCE
SINCE 1904
சிட்டி யூனியன் பேங்க்
www.cityunionbank.com
ராசியான பேங்க், ஈஸியான பேங்க்
Internet/Mobile Banking | Sovereign Gold Bonds | Chat Bot | Cardless Withdrawal | Fastag | Spend Analyzer | Debit and Credit Card | Prepaid/Travel Card | PoS | Social Media Banking | UPI QR Code for Merchants | Online Mutual Fund | Video KYC Online ASBA | WhatsApp Banking Insta Loan | Wallet | Set Card Limit | Green Pin
For Assistance, call our 24x7 Customer Care : 044 7122 5000

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/21-23
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th September 2023






தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜுவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.